TNED09000393-2025

**சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.**

**முன்னிலை:** திரு.A.பாலகிருஷ்ணன், B.A.,B.L.,

சார்பு நீதிபதி, கோபிசெட்டிபாளையம்.

2026ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.168/2025**

**(CNR.No-TNED09-000393-2025)**

1.K.சரஸ்வதி
2.S.நந்தினி
3.C.மாரப்பன்
4.மேரிசின்னப்பொன்னு
5.ஈஸ்வரி
6.பழனியம்மாள்
7.T.ஜெகதீஸ்வரன்
8.S.சத்தியபிரியா ... வாதிகள்

/இடையே/

1.N.ரங்கநாதன்
2.M.அசோக்குமார்
3.P.கோகிலவாணி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.168/2025 ஆக கடந்த 02.07.2025–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு மேற்படி வழக்கு இறுதியாக கடந்த 28.04.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது 1 முதல் 8 வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.கார்த்திக்,B.A.,BL., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஈஸ்வரன்,B.A.,L.L.B., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், வழக்காவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

1. வழக்கு சொத்தினை நலந்திகடு கண்டு 11 சமபாகங்களாகப் பிரித்து அதில் 8 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கி தனிசுவாதீனம் கொடுக்க

உத்தரவிட்டும் மற்றும் வழக்கு செலவு தொகை கோரியும், வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வழக்குரையின் சுருக்கம்:–</u>**

i) தாவா சொத்துக்கள் ஆதியில் சண்முகம், பெரியசாமி, செல்வராஜ் ஆகியோர்களுக்கு கடந்த 01.02.2023–ம் தேதியில் கோபிசெட்டிபாளையம் 2 நெ இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட சொத்துக்களாகும்.

ii) தாவா சொத்துக்களை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கடந்த 21.02.2024–ம் தேதியில் சண்முகம், பெரியசாமி, செல்வராஜ் ஆகியோர்களிடமிருந்து கோபிசெட்டிபாளையம் 2 நெ இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.420/2024–ல் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை உபயவாதிகள் கிரையம் ஏற்பட்ட தேதியிலிருந்து கூட்டு சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள்.

iii) தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதில் 11 வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்று வாதிகள், பிரதிவாதிகளை நேரில் சந்தித்து பல முறை கேட்டும், பிரதிவாதிகள் ஏதாவது காரணம் காட்டி காலம் தாழ்த்தி வந்தார்கள்.

iv) வாதிகள் கடந்த 25.04.2025–ம் தேதியில் ஊர் பெரியவர்கள் மூலம் பிரதிவாதிகளை அணுகி பாகப்பிரிவினை செய்து கொடுக்க கேட்ட போது பிரதிவாதிகள் மறுத்து விட்டார்கள்.

v) எனவே, வழக்கு சொத்தினை நலந்திகடு கண்டு 11 சமபாகங்களாகப் பிரித்து அதில் 8 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கி தனிசுவாதீனம் கொடுக்க உத்தரவிட்டும் மற்றும் வழக்கு செலவு தொகை கோரியும், வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. i) 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆஜரான உடன் அசல் வழக்கினை சமரச மையத்திற்கு பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாற்றுமுறை தீர்வுக்காக வேண்டி இவ்வழக்கானது சமரச மையத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.

ii) சமரச மையத்தில் இருந்து இந்நீதிமன்றத்திற்கு அறிக்கை கிடைக்கப்பப்பெற்றது மேற்படி அறிக்கையில் இவ்வழக்கானது சமரச மையத்தில் சமரசம் ஏற்பட்டதாக கூறப்பட்டது. எனவே, இவ்வழக்கின் தரப்பினர்கள் இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டார்கள். சமரச மையத்தின் உடன்படிக்கை நீ.ம.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**5. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியானெில் சமரச மையத்தின் உடன்படிக்கை ஏற்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**தீர்வு**

i) தாவா சொத்தானது 1 முதல் 8 வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கடந்த 21.02.2024–ம் தேதியில் கூட்டாக கிரையம் பெற்ற சொத்தாகும். மேற்படி கிரைய ஆவணமும் கோபிசெட்டிபாளையம் R 2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.420/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ii) வாதிகளும், பிரதிவாதிகளும் கூட்டாக கிரைய பெற்ற சொத்தினை அனுபவிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தினால் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) 1 முதல் 8 வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கோபிசெட்டிபாளையம் துணை சமரச மையத்தில் ஆஜராகி மத்தியஸ்தர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு சமரச உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி சமரச உடன்படிக்கையில் வழக்கின் தரப்பினர்கள் சொத்துக்களை தங்களுக்கு உள்ளாகவே பங்கீடு செய்து உடன்படிக்கை ஏற்பட்டு அதில் தரப்பினர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள்.

iv) ஆவண எண்.420/2024–ல் கண்ட சொத்தானது 1 முதல் 8 வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டாக பாத்தியப்பட்ட நிலையில் அவர்கள் அவர்களுக்கு உள்ளாகவே சமரச மையத்தில் மத்தியஸ்தர்கள் முன்னிலையில் பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். வழக்கின் தரப்பினர்களை இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்த போது சமரச மையத்தின் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டுள்ளார்கள். எனவே, மேற்படி சமரச மையத்தின் உடன்படிக்கை ஏற்கத்தக்கதாக அமைந்துள்ளது. அவ்வகையில் மேற்படி சமரச மைய உடன்படிக்கை அடிப்படையில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கலாம் என்று இந்நீதிமன்றம் மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காணுகிறது.

6) **எனவே முடிவாக,** 1 முதல் 8 வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கோபிசெட்டிபாளையம் துணை சமரச மையத்தில் செய்து கொண்ட சமரச உடன்படிக்கையின் அடிப்படையில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. சமரச மைய உடன்படிக்கை இத்தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் ஒரு அங்கமாக பாவிக்க உத்தரவிடப்படுகிறது.

6.1) வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு இருதரப்பினரும் அவரவர்கள் வழக்கு செலவுத்தொகையினை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

6.2) அசல் வழக்கானது சமரச மையத்தில் உடன்படிக்கை ஏற்பட்டு தீர்வு காணப்பட்டதால் நீதிமன்ற கட்டண விதிகளுக்கு உட்பட்டு வாதிகளால் செலுத்தப்பட்ட கட்டணம் மீண்டும் திருப்பி அளிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN Date: 2026.06.03 17:08:54 +0530

**சார்பு நீதிபதி,**
**கோபிசெட்டிபாளையம்.**

**1. நீதிமன்ற தரப்பு சாட்சிகள்:-**

நீ.ம.சா.1 சரஸ்வதி (1-ம் வாதி)
நீ.ம.சா.2 நந்தினி (2-ம் வாதி)
நீ.ம.சா.3 மாரப்பன்( 3-ம் வாதி)
நீ.ம.சா.4 மேரிசின்னப்பொன்னு (4-ம் வாதி)
நீ.ம.சா.5 ஈஸ்வரி (5-ம் வாதி)
நீ.ம.சா.6 பழனியம்மாள் (6-ம் வாதி)
நீ.ம.சா.7 ஜெகதீஸ்வரன் (7-ம் வாதி)
நீ.ம.சா.8 சத்தியபிரியா (8-ம் வாதி)
நீ.ம.சா.9 ரங்கநாதன் (1–ம் பிரதிவாதி)
நீ.ம.சா.10 அசோக்குமார் (2–ம் பிரதிவாதி)
நீ.ம.சா.11 கோகிலவாணி (3–ம் பிரதிவாதி)

**2. வாதிகள் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-** இல்லை

**3. பிரதிவாதிகள் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-** இல்லை

**4. நீதிமன்ற சான்றாவணம்:-**

| வ.எண். | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | --- | சமரச மைய உடன்படிக்கை | அசல் |

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN Date: 2026.06.03 17:09:06 +0530

**சார்பு நீதிபதி,**
**கோபிசெட்டிபாளையம்.**